# 8.2 நீதியை நிலைநாட்டிய சிலம்பு

I. வினாக்களுக்கு விடையளிக்க.

1. கண்ணகிக்கு ஏற்பட்ட துன்பம் யாது?

கண்ணகியின் கணவனான கோவலன் பாண்டிய மன்னனால் தவறான தீர்ப்பளிக்கப்பட்டு கொல்லப்பட்டான். இதுவே கண்ணகிக்கு ஏற்பட்ட துன்பம் ஆகும்.

2. புகார் நகரின் சிறப்புகள் யாவை?

ஒரு புறாவுக்காக தன் உடலையே தந்த சிபி மன்னனும், பசுவிற்கு நீதி வழங்குவதற்காக, தன் மகனைத் தேர்காலில் இட்டுக் கொன்ற மனுநீதிச் சோழனும் வாழ்ந்த சிறப்புக்குரியது புகார் நகரம்.

3. பாண்டிய மன்னனின் வெண்கொற்றக் குடை வீழக் காரணமென்ன?

பொற்கொல்லன் கூறியதைக் கேட்டு ஆராயாமல் கோவலனுக்குத் தண்டனை அளித்தான் பாண்டிய மன்னன். ஆதலால் அவனுடைய வெண்கொற்றக்குடை வீழ்ந்தது.

4. புகார் நகரில் வாழ்ந்த மன்னர்களாக கண்ணகி குறிப்பிட்டவர் யாவர்?

(i) உலகம் வியக்கும் வண்ணம் ஒரு புறாவுக்காக தன் உடலையே தந்த சிபி மன்னன்.

(ii) பார் போற்றும் பசுவை மக்கள் தெய்வமென வணங்க அதன் கன்றைத் தேர்க்காலிலிட்டுக் கொன்ற தன் மகனையும் அதே தேர்க்காலிலிட்டுக் கொன்றவன் மனுநீதிசோழன் ஆகிய இருமன்னர்களும் புகார் நகரில் வாழ்ந்தவர்கள் என்று கண்ண கி குறிப்பிடுகிறாள்.